2nd March 1966]

புலவர் கா. கோவிந்தன் : சென்னையில் இருந்து சேலம், கோவை, பங்களூர், பாம்பே முதலிய இடங்களுக்குச் செல்லும் ஒரே ஒரு ரோடு இதுதான். போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. நிதி வசதி இருந்தால் என்று சொல்லாமல் நிச்சயமாக இந்த மேம்பாலத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும் ? எல்லா மேம்பாலங்களையும் உடனடியாகக் கட்டித் தரவேண்டும் என்பது தான் என்னுடைய இலாகாவின் நோக்கம். நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப நாம் வகுத்துக்கொண்டுள்ள பிரையாரிடி லிஸ்ட் அடிப்படையில் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல மேம்பாலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பல என்றால் என்ன என்ன என்று சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : மூலக்கேள்வி ஒரு குறிப்பிட்ட இடத்தின் மேம்பாலத்தைப் பொறுத்தது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அவர் கேட்ட விவரங்களைத் தருகிறேன்.

பாலாற்றுப் பாலம்

*153 **கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் : திரு. எஸ். ஜே. ராமசாமி :** } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையில் உள்ள பாலாற்றுப் பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆமெனில், அவ்வேலை எப்போது மேற்கொள்ளப்படும் ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வேலூரில் உள்ள பாலம் முன்புகூட ஒரு தடவை விறல் ஏற்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. ஏன் இந்தப் பாலத்தை ரிப்பேர் செய்யக்கூடாது ? இல்லாவிடில் இதை அகலப்படுத்தவாவது இந்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதுபற்றி சீ. ப் என்ஜினியர் அனுப்பியுள்ள குறிப்பு—**Though the structure is old, it has withstood the traffic so far**-என்பதுதான். அபாயம் இருப்பதாக அவர் கருதவில்லை.

திரு. ர. ஜீவரத்தினம் : இந்தப் பாலம் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதனால் தினசரி விபத்துக்கள் ஏற்படுகின்றன. காட்பாடிக்குச் செல்ல வேண்டுமென்றாலும், அங்கிருந்து வரவேண்டுமென்றாலும் ஒரே பாதை நெரிசலாக போக்குவரத்து ஸ்தம்பிக்கிறது. ஆகவே, உடனடியாக விரிவு படுத்த ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தின் விருப்பமும் இதை உடனே மேற்கொள்ளவேண்டும் என்பதுதான். ஆனால், நிதி வசதியைப் பொறுத்தே செய்யவேண்டியிருக்கிறது.

விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்

*154 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஏதேனும் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன?